2. அறிவிப்பு.

(1) காமராஜ் பல்கலைக் கழகப் பொதுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : காமராஜ் க்ல்கலைக் கழகப் பொதுக் குழுவில் 28-10-78 அன்று முதல் ஏற்படவிருக்கும் வெற்றிடங்களுக்கு திரு. வே. தங்கப்பாண்டியன், திரு. ஈ. எஸ். வெங்கடேசன் ஆகிய இருவரிடமிருந்து மட்டுமே அதற்கான வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளதால், அவ்விருவரும் உரியவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன்.

3. மேலவை விதி 82-ன் கீழ் விவர அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பேருந்துகள் மீண்டும் ஓடுவது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மேலவை விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த காரியப்பட்டி கிராமத்தில் 13-8-1978 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நகரியக்கப் பேருந்துகளை அருப்புக்கோட்டையிலிருந்து மீனாட்சிபுரத்திற்கும், மீனாட்சிபுரத்திலிருந்து மதுரைக்கும் தேவையென முதலமைச்சருக்கும் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் விண்ணப்பிப்பது என தீர்மானிக்கப்பட்டது. இதையொட்டி 10 நபர் நடவடிக்கைக் குழு ஒன்று காரியப்பட்டியில் அமைக்கப்பட்டது. 26-8-1978 அன்று இந்த நடவடிக்கைக் குழுவானது 4-9-1978 அன்று பேருந்து மறியல் போராட்டத்தை அறிவித்து அச்சடித்த கோரிக்கைப் பிரதிகளை விநியோகித்து கோரிக்கைகளை வலியுறுத்தினர். மேற்கண்ட கோரிக்கைப் பிரதி கிடைக்கப் பெற்றவுடன் 27-8-1978 அன்று இராமநாதபுரம் மாவட்ட போக்குவரத்து அதிகாரி, அருப்புக்கோட்டை தாசில்தாருடனும், காவல்துறை அதிகாரியுடனும், பொதுமக்களையும் ஏனைய மனுதாரர்களையும் சந்தித்தனர். அன்று அவர்களிடம் அருப்புக்கோட்டையிலிருந்து மீனாட்சிபுரத்திற்கு இடைப்பட்ட தூரமானது 25 கி.மீ.க்கு மேல் இருப்பதால் நகரப் பேருந்து இயக்க இயலாது என்று அருப்புக்கோட்டையிலிருந்து விருதுநகருக்கு ஒரு நகரப் பேருந்து பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினரால் இயக்கப்படும் என்றும் கூறப்பட்டது. அதன்படி அந்தப் பேருந்துகளை பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகின்றது. மதுரையிலிருந்து மீனாட்சிபுரத்திற்கு பேருந்து விடுவதைப் பொறுத்தவரையிலும், மோட்டார் வாகனப் பிரிவுச் சட்டம் 57(2)

விதியின்படி மேற்பட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எல்லாக் கோரிக்கைகளுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னரும் 4-9-1978 அன்று சுமார் 200 பேர்கள் காரிப்பட்டி பேருந்து நிலையத்தில் கூடி பஸ் மறியல் போராட்டத்தை நடத்த தலைப்பட்டனர். விரும்பக் கூடாத நிகழ்ச்சிகளைத் தடுக்கும்பொருட்டு மதுரை—அருப்புக்கோட்டை பேருந்துகள் காரியப்பட்டி வழியாகச் செல்லாமல் விருதுநகர் வழியாகத் திருப்பிவிடப்பட்டது. இதன் காரணமாக பஸ் மறியல் செய்ய ஏது இல்லாமல் போகவே தொடர் உண்ணு விரதத்தை 5-9-1978 முதல் தொடர்ந்தார்கள். போராட்டக்காரர்கள் சாலை களின் நடுவே தடைகளையும் வைத்தனர். போராட்டம் நடத்தினால் கோரிக்கைகள் நிறைவேறும் என்ற எண்ணத்தில் பேருந்சகளைத் தடுத்து நிறுத்தியதனால் காரியப்பட்டி, மற்ற அருகாமையில் உள்ள கிராம பொது மக்கள் இன்னலுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர் காவல்துறையாளரின் உதவியால் 9-9-1978 அன்று சாலைகளில் தடைகளை அகற்றினர். தடைகளை அகற்றுவதற்கு உள்ளூர் மக்களில் சிலர் தடுத்தபோது 122 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். பொதுமக்கள் மறுபடியும் மறியல் செய்ததால் பேருந்துகள் ஓட இயலவில்லை. கோட்டாட்சி யாளர் காரியப்பட்டிற்குச் சென்று சமரச முயற்சிகளை நடத்த எற்பாடுகளைச் செய்தார். சமரச முயற்சிகள் நீடித்து அதன் பலனாக இன்று காலை போராட்டம் நிறுத்தப்பட்டு பேருந்துகள் எப்போதும் போல ஓடிக்கொண்டிருக்கின்றன.

4. கவன ஈர்ப்பு.

(1) **தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் வேலைப் பாதுகாப்புப் போராட்டக் குழு தனியார் நிர்வாகத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர் களுக்கு நிவாரணம் வேண்டி சென்னை, குறளகம் முன்பு சாகும்வரை உண்ணு விரதம் குறித்து.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருவாளர்கள் க. மீனாட்சிசுந்தரம், செ. முத்துசாமி, சி. ஆர். லட்சுமிகாந்தன், பி. ஆர். தாமஸ், ம. சங்கர

செ. முத்துசாமி, சி. ஆர். லெட்சுமிகாந்தன், பி. ஆர். தாமஸ், ம. சங்கர

மூன் மொழிந்தால் போதுமானது. உறுப்பினர்கள் விரும்பினால் ஒருவர் ஒருவராகக் கேள்விகள் கேட்டு மேலும் விளக்கம் பெறலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம : மாண்புமிகு தலைவரவர்களே, "தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் வேலைப் பாதுகாப்புப் போராட்டக் குழு சென்னை நகரில் குறளகம் முன்பு தனியார் நிர்வாகத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்